தேசத்திற்கான சமரசம் - 3.0
இராமநாதபுரம் மாவட்ட சிறப்பு சமரச தீர்வு முகாம்

01.10.2026 முதல் 31.12.2026 வரை

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை சமரசத்தின் மூலம் தீர்வுகாண மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதமன்றம் உத்தரவின் படி 01.10.2026 முதல் 31.12.2026 வரை சிறப்பு சமரச தீர்வு முகாம் நடைபெறுகிறது. இந்த சிறப்பு சமரச தீர்வு முகாமில் குடும்ப பிரச்சனை வழக்குகள், வாகன விபத்து இழப்பீடு வழக்குகள், குடும்ப வன்முறை வழக்குகள், காசோலை மோசடி வழக்குகள், வர்த்தக பிரச்சனை வழக்குகள், சமரசத்திற்குட்பட்ட குற்றவியல் வழக்குகள், பாகப்பிரிவினை வழக்குகள், வாடகை தகராறு வழக்குகள், நில ஆர்ஜித வழக்குகள், இதர உரிமையியல் வழக்குகள் மற்றும் தொழிலாளர் நல வழக்குகள் உட்பட பல்வேறு வழக்குகள் சமரச தீர்வு மையத்தில் தீர்வு காணப்பட உள்ளது.

மாவட்ட சமரச மையம் இராமநாதபுரம், துணை சமரச மையங்கள் பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடனை, மற்றும் இராமேஸ்வரம் ஆகிய 5 தாலுகாக்களிலும் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன.

நிலுவையில் உள்ள வழக்குகளை நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமரச மையத்திற்கு அனுப்பக் கோரலாம். அனைத்து மையங்களிலும் உள்ள பயிற்சி பெற்ற சமரசர்கள், சமரச பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக வழிநடத்துவர். சமரசர் முன்னிலையில் வழக்காடிகள் எதிர்தரப்புடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தலாம். இதில் வழக்காடிகள் தங்களது வழக்கறிஞருடன் பங்கு பெறலாம். சமரசம் ஏற்படவில்லை என்றால் வழக்கை நீதிமன்றத்தில் தொடரலாம். வழக்குகளுக்கு சமரச மையத்தில் சுமூகமான தீர்வு காணப்பட்டால் முழு நீதிமன்ற கட்டணத்தையும் திரும்பப் பெறலாம்.

இந்த சிறப்பு முகாம் 01.10.2026 முதல் 31.12.2026 வரை நடைபெறுகிறது. வழக்காடிகள் சமரச மையத்தில் நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ ஆஜராகி தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம். பொதுமக்கள் மற்றும் வழக்காடிகள் இச்சிறப்பு சமரச தீர்வு முகாமை பயன்படுத்தி நிலுவையில் உள்ள தங்களது வழக்குகளை சமரச தீர்வு மையத்தின் மூலம் விரைந்து முடித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவங்களுக்கு

மாவட்ட நீதிமன்றம் மற்றும் தாலுகா நீதிமன்றங்களில் உள்ள சமரச மையத்தை அணுகவும்.
மாவட்ட சமரச மையம், இராமநாதபுரம்.